DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No. 294/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW1 as PW1 | | | |
| Name | : | சலீம் | Age | : | 44 |
| S/o | : | ஆறுமுகம் | Occupation | : | மேஸ்திரி |
| Village | : | இந்திரா நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2026.

**13.03.2026**

**(எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் இந்திரா நகரில் குடியிருந்து கொண்டு மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் அவர்கள் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள். கடந்த 2019-ம் வருடம் எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்தை எங்கு வைத்து போட்டேன் என்று தெரியாது. புகார் மனுவில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **(புகார் மனுவில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 01.06.2019 ம் தேதி இரவு 09.45 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் என்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கையாலும், கல்லாலும் அடித்து தலையில் இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த என் அம்மா மற்றும் எனது நண்பர் அசோக் ஆகியோர்கள் எதிரிகளை விலக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்த போது கேணிக்கரை காவல்நிலைய போலீசாரிடம் புகார் மனு கொடுத்து விட்டு எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை**

**மறுவிசாணை - இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.13 14:24:12 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 294/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW2 as PW2 | | | |
| Name | : | காளிமுத்து | Age | : | 68 |
| W/o | : | ஆறுமுகம் | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | இந்திரா நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2026.

**13.03.2026**

**(எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் இந்திரா நகரில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 எனது மகன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 01.06.2019 ம் தேதி இரவு 09.45 மணியளவில் அ.சா.1 என் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் அ.சா.1 யை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கையாலும், கல்லாலும் அடித்து அ.சா.1 ன் தலையில் இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த நான் மற்றும் அ.சா.1 ன் நண்பர் அசோக் ஆகியோர்கள் எதிரிகளை விலக்கிவிட்டோம் என்று கேணிக்கரை காவல்நிலைய போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்து விட்டு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை**

**மறுவிசாணை – இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.13 14:24:21 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 294/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW3 as PW3 | | | |
| Name | : | அசோக் | Age | : | 40 |
| S/o | : | அய்யாவு | Occupation | : | எலக்ட்ரீசியன் |
| Village | : | இந்திரா நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2026.

**13.03.2026**

**(எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் இந்திரா நகரில் குடியிருந்து கொண்டு எலட்ரீசியன் ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் எனது ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1 எனது நண்பர். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 01.06.2019 ம் தேதி இரவு 09.45 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் அ.சா.1 யை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கையாலும், கல்லாலும் அடித்து அ.சா.1 ன் தலையில் இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த நான் மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் எதிரிகளை விலக்கிவிட்டோம் என்று கேணிக்கரை காவல்நிலைய போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்து விட்டு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாணை – இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.13 14:24:28 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**CC.No. 294/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | | | |
| Name | : | சரவணக்குமார் | Age | : | 55 |
| S/o | : | மாரி | Occupation | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village | : | கேணிக்கரை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2026.

**13.03.2026**

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி. தீபா மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு. பாண்டி ஆகியோர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் அவர்களது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பை பார்த்து அவர்களுக்காக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.06.2019 ம் தேதி 09.00 மணிக்கு கேணிக்கரை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி. தீபா என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆறுமுகம் மகன் சலீம் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 165/2019 பிரிவுகள் 294(b), 324 இதசவாக வழக்குப்பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 10.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் அழகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்துள்ளார். **(மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வைமகஜர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்பு சாட்சிகளான சலீம், காளிமுத்து, அசோக், சாந்தக்குமார் மற்றும் அழகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்நிலையில் வழக்கை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு. பாண்டி 16.04.2020ம் தேதி 08.30 மணிக்கு கேணிக்கரை சந்திப்பு ரோடு அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் சென்றுள்ளார்கள்.பின்னர் இவ்வழக்கில் அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.மதிவாணன் என்பவரை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார்தாரரிடம் இருந்து புகார் மனு எதுவும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பேரில் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை இந்த வழக்கில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை உற்பத்தி செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.13 14:24:38 +0530